செ.வெ.எண்:18 நாள்:25.11.2021

**<u>மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், காளஹஸ்தினாதபுரம் கிராம ஊராட்சியில் 25.11.2021 அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இரா.லலிதா, இ.ஆ.ப., அவர்கள் அறிவுரைகளுக்கிணங்க, கோமாரி நோய் இரண்டாவது சுற்று (NADCP FMD – II Round) தடுப்பூசி முகாமினை பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு.நிவேதா எம்.முருகன் அவர்கள் துவக்கி வைத்தார்.</u>**

தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் கோமாரி நோய் இரண்டாவது சுற்று (NADCP FMD – II Round) தடுப்பூசி முகாம் நடத்திட சென்னை கால்நடைபராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர் அவர்கள் ஆணையிட்டதை தொடர்ந்து, மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், காளஹஸ்தினாதபுரம் கிராம ஊராட்சியில் 25.11.2021 அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இரா.லலிதா, இ.ஆ.ப., அவர்கள் அறிவுரைகளுக்கிணங்க, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு.நிவேதா எம்.முருகன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் 362 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, 48 கால்நடைகளுக்கு சிகிச்சை, 112 கால்நடைகளுக்கு குடற்புழுநீக்கம், 18 கால்நடைகளுக்குசினை பரிசோதனை மற்றும் 13 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மேற்கொள்ளப்பட்டது. கால்நடைகளுக்கான தாது உப்பு கலவை 62 பைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் 152 பயனாளிகள் பயனடைந்தனர்.

இம்முகாமில் நாகப்பட்டினம் கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் மருத்துவர்.சு.சஞ்சீவிராஜ், துணை இயக்குநர் மருத்துவர்.மு.சுப்பையன், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர்கள் மருத்துவர்.மு.முத்துகுமாரசாமி, மருத்துவர்.எம்.கணேசன், மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.